ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 158/8 — 1975 අප්‍රේල් 10 වැනි බ්‍රහස්පතින්දා — 1975.04.10
158/8 ம் இலக்கம் — 1975 ம் ஆண்டு ஏப்பிறில் மாதம் 10 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பி. 31/71

*1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழில் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டம்*

1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழில் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகள்.

என். எம். பெரேரா,
நிதியமைச்சர்.

கொழும்பு—1,
1975, ஏப்ரில் மாதம் 9 ஆந் தேதி.

ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்கு விதிகள், 1975 ஆம் ஆண்டின் "ஒற்றேமோபைல் அசம்பிலி அன் மனுவக்சர் லிமிற்றெட் (சொத்துக்களும் பொறுப்புக்களும்) ஒழுங்கு விதிகள்" என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) நிதி அமைச்சர், குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றி ஆராய்ந்து, தமக்கு அறிக்கை தயாரித்து அளிப்பதற்காக பெயர்வழியாக அல்லது பதவி வழியாக மூன்று ஆட்களுக்குக் குறையாதோரை ஒரு குழுவாக அமைவதற்கென நியமிக்கலாம்.

(2) ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களில் ஒருவரை குழுவின் தவிசாளராகவிருப்பதற்கென நிதி அமைச்சர் பெயர்குறித்து நியமிக்கலாம்.

3. குழுவானது குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சிக்குப் பணங்கொடுக்க வேண்டிய அல்லது அதற்கெதிரான கோரிக்கைகளையுடைய எவரையும் அத்தகைய கடன் அல்லது கோரிக்கைபற்றி ஓர் அறிவித்தலில் குறிப்பிடப்படலாதான தேதியன்று அல்லது அதற்கு முன்னர் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு தேவைப்படுத்தி, ஒரு புதினப் பத்திரிகையிலோ அதற்கு மேற்பட்ட புதினப் பத்திரிகைகளிலோ அத்தகைய அறிவித்தலை வெளியிடலாம் அல்லது வெளியிடுவிக்கலாம்.

4. குறிப்பிட்ட பொறுப்பு முயற்சியினதும் அந்தப் பொறுப்பு முயற்சியின் நோக்கத்துக்காக அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஆதனத்தினதும் நியாயமான பெறுமதியை நிச்சயிப்பதற்கு அவசியமாகக்கூடிய அத்தகைய நடவடிக்கைகள் எல்லாவற்றையும் குழுவானது எடுத்தல் வேண்டும்.

5. (1) குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் பெறுமதியை மதிப்பிடும் நோக்கங்களுக்காக, குழுவானது, எவையேனும் பங்குகளின், உடைமைகளின், முதலீடுகளின் அல்லது பிற அக்கறைகளின் சமநிலையான பெறுமதியை, உழைத்த இலாபங்களுக்கு, சந்தை நிலைமைகளுக்கு அல்லது பிற காரணங்களுக்கு அமைய, கருத்திற்கொள்ளலாம்.

(2) குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் பொறித்தொகுதி, இயந்திரம், பிற சாதனம் என்பன உட்பட்ட அதன் ஆதனத்தின் பெறுமதியை மதிப்பிடும் நோக்கத்துக்காக, அக்குழுவானது, அத்தகைய ஆதனத்தைக் கொள்வனவு செய்த காலத்தில் இருந்த கொள்வனவு விலையை அல்லது சந்தை விலையைக் கருத்திற்கொள்ளலாம் என்பதுடன், அதிலிருந்து, தேய்மானம், சந்தை நிலைமைகள் அல்லது பிற காரணங்கள் பொருட்டு நியாயமானது எனத்தோன்றும் அத்தகைய தொகையைக் கழிக்கலாம்.

(3) குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் பொறுப்புக்களின் பெறுமதியை மதிப்பிடும் நோக்கங்களுக்காக, குழுவானது, பிறவற்றுடன், நிலுவையாகவுள்ள எவையேனும் ஒப்பந்த வழியான அல்லது பிற சட்டமுறையான கடப்பாடுகளையும், அங்கீகரிக்கப்பட்ட நிதி அல்லது வர்த்தக நிறுவனங்களுடனான அல்லது குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் பணிப்பாளர் சபையின் எவரேனும் உறுப்பினர்

தவிர்ந்த வேறு ஆட்களுடனை நல்லெண்ணக் கொடுக்கல் வாங்கல்களையும், ஏதேனும் அரசாங்கத் திணைக் களத்துக்கு அல்லது பிற அரசு நிறுவனத்துக்குச் சேரவேண்டியுள்ள கொடுப்பனவுகளையும், குறிப்பிட்ட பொறுப்பு முயற்சியின் செயற்பாடுகள் காரணமாக ஏதேனும் நியதிச்சட்டச் சபையினால் அல்லது கூட்டுத் தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் நட்டத்தையும் கருத்திற்கொள்ளலாம்.

6. காலத்துக்குக்காலம் குழுவுக்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய விவரங்கள் அல்லது பிற தகவல் யாவற்றையும் தருதிவாய்ந்த அதிகாரி கொடுத்துதவுதல் வேண்டுமென்பதுடன், குழுவின் வேலையை இலகு வாக்குவதற்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய உதவி யாவற்றையும் அளித்தலும் வேண்டும்.

7. குழுவானது, குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பற்றியும், குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சி தொடர்பில் சேரவேண்டிய எவையேனும் கொடுப்பனவு களும், அத்தகைய கொடுப்பனவு ஏதேனுமிருப்பின், அது எவருக்குச் செலுத்தப்பட வேண்டுமோ அக்கட்சி யும் அல்லது கட்சிகளும் பற்றியுமுள்ள அவற்றின் மீதான தமது விதப்புரைகளுடன் நிதி அமைச்சருக்கு அறிக்கை செய்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையைப் பெற்றவுடன் நிதி அமைச்சர், அத்தகைய ஏதே னும் கொடுப்பனவு தொடர்பில் அவர் தக்கதெனக் கருதும் அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

8. (1) மேலேயுள்ள 7 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையினால் இன்னலுறும் ஆள் எவரும், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து 14 நாட்களுள், மேன்முறையீட்டுக்கான ஏதுக் களைக் கூறி நிதி அமைச்சருக்கு அத்தகைய கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) 8 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின்கீழான மேன்முறையீட்டைப் பெற்றவுடன் நிதி அமைச்சர் 7 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையைத் திருத்தலாம். அவ்வாறு திருத்தப்பட்ட கட்டளையானது இறுதியானதும் முடிவானதும் ஆதல் வேண்டும் என்பதுடன், சம்பந்தப்பட்ட யாவரையும் பணிப்பதாதலும் வேண்டும்.

9. நிதியமைச்சர் குழுவின் உறுப்பினருக்குக் குறிப்பிட்ட ஊதியத்தை அல்லது கட்டணத்தைச் செலுத்துமாறு கட்டளையிடலாம் என்பதுடன், அத்தகைய ஊதியம் அல்லது கட்டணம் குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் நிதிகளிலிருந்து செலுத்தப்படுதலும் வேண்டும்.

10. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக—

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழில் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ், குறிப்பிட்ட பொறுப்பு முயற்சி யின் அலுவல்களை நிருவகிப்பதற்கென நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி எனப் பொருள்படும்,

"குறிப்பிட்ட பொறுப்பு முயற்சி" என்பது "ஆற்றோமோபைல் அசம்பிளி அன் மனுவக்சர் லிமிற்றெட்" என்றழைக்கப்படும் கம்பனியினால் கொண்டு நடாத்தப்பட்டதும், 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழில் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டத்தின் கீழாக்கப்பட்டு 1972 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 8 ஆந் தேதிய 15,000/7 என்னும் இலக்கம் கொண்ட அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட உரித்தாக்கற் கட்டளையால் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்டதுமான பொறுப்பு முயற்சி எனப் பொருள்படும்.

4-342/1

---

ச. வ.—பி. 31/71.

1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழில் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டம்

1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழில் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டத்தின் 12 ஆம் பிரிவின்கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

என். எம். பெரேரா,
நிதி அமைச்சர்.

கொழும்பு—1,
1975, ஏப்ரில் மாதம் 9 ஆந் திகதி.

ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 1975 ஆம் ஆண்டின் "யூனைரெட் மோட்டார் லிமிரெட்" (சொத்துக்களும் பொறுப்புக்களும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (1) நிதி அமைச்சர், குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் சொத்துக்களும் பொறுப்புக் களும் பற்றி ஆராய்ந்து, தமக்கு அறிக்கை தயாரித்து அளிப்பதற்காக பெயர் வழியாக அல்லது பதவி வழியாக மூன்று ஆட்களுக்குக் குறையாதோரை ஒரு குழுவாக அமைவதற்கென நியமிக்கலாம்.

(2) ஓராம் பந்தியின் கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களில் ஒருவரை குழுவின் தவிசாளராகவிருப்ப தற்கென நிதி அமைச்சர் பெயர் குறித்து நியமிக்கலாம்.

3. குழுவானது குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சிக்குப் பணங்கொடுக்கவேண்டிய அல்லது அதற் கெதிரான கோரிக்கைகளையுடைய எவரையும் அத்தகைய கடன் அல்லது கோரிக்கை பற்றி ஓர் அறிவித்த லில் குறிப்பிடற்பாலதான தேதியன்று அல்லது அதற்கு முன்னர் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு தேவைப்படுத்தி, ஒரு புதினப்பத்திரிகையிலோ அல்லது மேற்பட்ட புதினப்பத்திரிகைகளிலோ அத்தகைய அறிவித்தலை வெளியிடலாம் அல்லது வெளியிடுவிக்கலாம்.

4. குறிப்பிட்ட பொறுப்பு முயற்சியினதும் அந்தப் பொறுப்பு முயற்சியின் நோக்கத்துக்காக அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஆதனத்தினதும் நியாயமான பெறுமதியை நிச்சயிப்பதற்கு அவசியமாகக்கூடிய அத்தகைய நடவடிக்கைகள் எல்லாவற்றையும் குழுவானது எடுத்தல் வேண்டும்.

5. (1) குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் பெறுமதியை மதிப்பிடும் நோக்கங்களுக்காக, குழுவானது, எவையேனும் பங்குகளின், உடைமைகளின், முதலீடுகளின் அல்லது பிற அக்கறைகளின் சம நிலையான பெறுமதியை, உழைத்த இலாபங்களுக்கு, சந்தை நிலைமைகளுக்கு அல்லது பிற காரணங்களுக்கு அமைய, கருத்திற் கொள்ளலாம்.

(2) குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் பொறித்தொகுதி, இயந்திரம், பிற சாதனம் என்பன உட்பட்ட அதன் ஆதனத்தின் பெறுமதியை மதிப்பிடும் நோக்கத்துக்காக, அக்குழுவானது, அத்தகைய ஆதனத்தைக் கொள்வனவு செய்த காலத்தில் இருந்த கொள்வனவு விலையை அல்லது சந்தைவிலையைக் கருத்திற்கொள்ளலாம் என்பதுடன், அதிலிருந்து, தேய்மானம், சந்தைநிலைமைகள் அல்லது பிற காரணங்கள் பொருட்டு நியாயமானது எனத்தோன்றும் அத்தகைய தொகையைக் கழிக்கலாம்.

(3) குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் பொறுப்புக்களின் பெறுமதியை மதிப்பிடும் நோக்கங்களுக்காக, குழுவானது, பிறவற்றுடன், நிலுவையாகவுள்ள எவையேனும் ஒப்பந்த வழியான் அல்லது பிற சட்டமுறையான கடப்பாடுகளையும், அங்கீகரிக்கப்பட்ட நிதி அல்லது வர்த்தக நிறுவனங்களுடனு அல்லது குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் பணிப்பாளர் சபையின் எவரேனும் உறுப்பினர் தவிர்ந்த வேறு ஆட்களுடனுன நல்லெண்ணக் கொடுக்கல் வாங்கல்களையும், ஏதேனும் அரசாங்கத் திணைக்களத்துக்கு அல்லது பிற அரச நிறுவனத்துக்கு சேர வேண்டியுள்ள கொடுப்பனவுகளையும், குறிப்பிட்ட பொறுப்பு முயற்சியின் செயற்பாடுகள் காரணமாக ஏதேனும் நியதிச்சட்டச் சபையினுல் அல்லது கூட்டுத்தாபனத்தினுல் உறப்பட்ட ஏதேனும் நட்டத்தையும் கருத்திற் கொள்ளலாம்.

6. காலத்துக்குக்காலம் குழுவுக்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய விவரங்கள் அல்லது பிற தகவல் யாவற்றையும் தகுதிவாய்ந்த அதிகாரி கொடுத்துதவுதல் வேண்டுமென்பதுடன், குழுவின் வேலையை இலகுவாக்குவதற்குத் தேவைப்படக்கூடிய அத்தகைய உதவி யாவற்றையும் அளித்தலும் வேண்டும்.

7. குழுவானது, குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பற்றியும் குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சி தொடர்பில் சேர வேண்டிய எவையேனும் கொடுப்பனவுகளும், அத்தகைய கொடுப்பனவு ஏதேனுமிருப்பின், அது எவருக்குச் செலுத்தப்படவேண்டுமோ அக்கட்சியும் அல்லது கட்சிகளும் பற்றியுமுள்ள அவற்றின் மீதான தமது விதப்புரைகளுடன் நிதி அமைச்சருக்கு அறிக்கை செய்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையைப் பெற்றவுடன் நிதி அமைச்சர், அத்தகைய ஏதேனும் கொடுப்பனவு தொடர்பில் அவர் தக்கதெனக் கருதும் அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

8. (1) மேலேயுள்ள 7 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையினுல் இன்னலுறும் ஆள் எவரும், அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதியிலிருந்து 14 நாட்களுள், மேன்முறையீட்டுக்கான ஏதுக்களைக் கூறி நிதி அமைச்சருக்கு அத்தகைய கட்டளைக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) 8 ஆம் ஒழுங்குவிதியின் (1) ஆம் பந்தியின்கீழான மேன்முறையீட்டைப் பெற்றவுடன் நிதி அமைச்சர் 7 ஆம் ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையைத் திருத்தலாம். அவ்வாறு திருத்தப்பட்ட கட்டளையானது இறுதியானதும் முடிவானதும் ஆதல் வேண்டும் என்பதுடன், சம்பந்தப்பட்ட யாவரையும் பணிப்பதாதலும் வேண்டும்.

9. நிதியமைச்சர் குழுவின் உறுப்பினருக்குக் குறிப்பிட்ட ஊதியத்தை அல்லது கட்டணத்தைச் செலுத்துமாறு கட்டளையிடலாம் என்பதுடன், அத்தகைய ஊதியம் அல்லது கட்டணம் குறிப்பிட்ட தொழில் பொறுப்பு முயற்சியின் நிதிகளிலிருந்து செலுத்தப்படுதலும் வேண்டும்.

10. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக—

"தகுதிவாய்ந்த அதிகாரி" என்பது 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழில் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ், குறிப்பிட்ட பொறுப்பு முயற்சியின் அலுவல்களை நிருவகிப்பதற்கென நியமிக்கப்பட்ட தகுதிவாய்ந்த அதிகாரி எனப் பொருள்படும்.

"குறிப்பிட்ட பொறுப்பு முயற்சி" என்பது "யூனைரெட் மோட்டார் லிமிற்றெட்" என்றழைக்கப்படும் கம்பனியினுல் கொண்டு நடாத்தப்பட்டதும், 1971 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தொழில் பொறுப்பு முயற்சிகள் (கொள்ளல்) சட்டத்தின் கீழாக்கப்பட்டு 1972 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 8 ஆந் தேதிய 15,000/7 என்னும் இலக்கம் கொண்ட அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட உரித்தாக்கற் கட்டளையால் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்டதுமான பொறுப்பு முயற்சி எனப் பொருள்படும்.

4-342/2